IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. – 100/2020

P.W.4 – லோகநாதன், த/பெ.ஆர்.கேசவன்.

DATE – 26.03.2025

(சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில்)

வா.சா.4 குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)

1. நான் ரியல் எஸ்டேன் தொழில் செய்து வருகிறேன். அதை முதல் விசாரணையில் சொல்லவில்லை. நான் பத்திரம் எழுதும் தொழில் செய்யவில்லை. காட்பாடியில் பைனான்ஸ் தொழில் 10 வருடங்களுக்கு முன்பு செய்தேன், தற்போது செய்வதில்லை. புரோநோட் தயாரிப்பது அதை ரத்து செய்வது போன்ற விவரங்கள் எனக்கு தெரியும்.

2. இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு எனக்கு சம்மன் எதுவும் வரவில்லை, என்னிடம் வாதி வந்து சாட்சி அழைக்கவில்லை. நான் வாதி வழக்கறிஞரிடம் நேராக சென்று முதல் விசாரணை வாக்குமூலம் தயாரித்ததில் கையெழுத்து போட்டேன். இதற்கு முன்பாக நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரை உள்ள புரோநோட்டுகள் வாதி வெங்கடேசனுக்கு சொந்தமான லத்தேரி அருகில் உள்ள செஞ்சி கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து எழுதிக் கொடுத்தேன்.

3. மேற்படி 5 புரோநோட்டுகளும் எழுதப்பட்டதில் ஆரம்பம் முதல் கடைசி வரை ஓரே அளவான இடைவெளி மற்றும் ஓரே மாதிரியாக எழுதப்பட்டதா என்றால், வெவ்வேறு வகையில் உள்ளது. புரோநோட்டை

எழுத சொன்னால் நான் பார்க்காமலே எழுதி கொடுப்பேன். தாங்களும், வாதியும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் என்றால், இருக்கலாம், உறவினர்கள் இல்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரை ஆவணங்களை பிரதிவாதி எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், ஏற்கனேவே வாதியிடம் பிரதிவாதி கையொப்பம் செய்து கொடுத்து இருந்த வெற்று தாள்களை வைத்து தயாரித்து கொடுத்துள்ளீர் என்று சொன்னால், சரியல்ல, சூர்யகுமார் கேட்டு கொண்டதற்கிணங்க அவர் சொன்னதன் பேரில் நான் எழுதிக் கொடுத்தேன். பிரதிவாதி வெங்கடேசனிடம் பணம் கேட்கும் போது நான் போகவில்லை. பணம் வாங்கும் போதெல்லாம் சூர்யகுமார் என்னை அழைத்து செல்வார். அந்த விவரத்தை நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.14 ஆவணத்தை நான் தான் எழுதினேன். இதற்கு முன்பு அவ்வாறு ஆவணத்தை நான் எழுதவில்லை. அந்த பத்திரத்தில் தலைப்பு ஏதும் எழுதவில்லை. இரண்டு பேரும் சேர்ந்து எழுதிக் கொண்டதாக உள்ளது என்றாலும், அதில் வெங்கடேசன் கையெழுத்து போடவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.14 ல் சாட்சிகள் பெயர் மற்றும் விலாசங்கள் எழுதப்படவில்லை என்றால், சரிதான். அதில் என்னுடைய கையொப்பம் உள்ளது, அதில் என்னுடைய பெயர் மற்றும் விலாசம் உள்ளது. வா.சா.ஆ.1ல் உள்ள என்னுடைய எழுத்துக்கள் அளவுகளும், வா.சா,.ஆ.14 ல் உள்ள எழுத்துக்களுக்கும் வித்தியாசம் உள்ளது என்றால், சரிதான். ஏற்கனவே கையொப்பம் பெற்று வைத்து இருந்த தாளில் அதற்கேற்றார் போல் ஆவணம் தயாரித்து கொடுத்துள்ளீர் என்றால், சரியல்ல. கடந்த 08.01.2020 தேதியில் தாங்கள் சொன்னது போல்

எந்த பஞ்சாயத்து நடக்கவில்லை என்றாலும், வா.சா.ஆ.14 ஆவணம் ஏற்படவில்லை என்றாலும், சரியல்ல.வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.14 ஆகியவகைள் வாதி கேட்டு கொண்டதற்கிணங்க தங்களால் தயாரிக்கப்பட்டவை என்றால், சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறீர் என்றால், சரியல்ல.

சூர்யகுமார் மன சம்மத்துடன் எழுதிக் கொடுத்தாக வா.சா.ஆ.14 ல் குறிப்பிட்டுள்ளதால் வெங்கடேசனிடம் சாட்சியாக கையெழுத்து வாங்கவில்லை என்று சாட்சி தன்னிச்சையாக கூறுகிறார்.

**மறுவிசாரணை – இல்லை**.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 26.03.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

Sd/G.Radhakrishnan
Additional District Judge(FTC)(FAC)
Vellore.